<u>பிரச்சார டைரி – ஏப்ரல் 15, 2014</u>

**அருண் ஜேட்லி**
(மாநிலங்களவை எதிர்கட்சித் தலைவர்)

காங்கிரஸ் கட்சியின் புதிய கோஷம் : "நான் இல்லம்மா"

நேற்று ஒரு முன்னணி தொலைக்காட்சி செய்தி சேனல் தட கருத்து கணிப்பின் முடிவை வெளியிட்டது. இதன்படி பா.ஜ.க.வுக்கு 226 தொகுதிகளும் தேசிய ஜனநாயக கூட்டணிக்கு நாடாளுமன்றத்தில் அறுதிப் பெரும்பான்மையாக 275 சீட்கள் கிடைக்கும் என்றும் கூறுகிறது. தேசிய ஜனநாயக கூட்டணிக்கு அறுதிப் பெரும்பான்மை கிடைக்கும் என்று கணித்த முதல் கருத்து கணிப்பு இது. இந்த கருத்து கணிப்பு தற்போதைய மக்களின் போக்கை படம்பிடித்துக் காட்டியுள்ளது என்று நான் நம்புகிறேன். அனைத்து கட்டங்களிலும் வாக்குப்பதிவு தேதி நெருங்கி வரும் இந்த நேரத்தில் அந்தந்த இடங்களில் ஆதரவு அலை நிலவரம் தெளிவாகி வருகிறது. இதன் அடிப்படையில் இரண்டு விஷயங்கள் தெளிவாகத் தெரிகிறது. காங்கிரசுக்கு எதிரான கோப அலை மற்றும் நரேந்திர மோடியின் மேல் நம்பிக்கை அலை பெருகி வருகிறது. பொதுவாக முன்னணியில் இருக்கும் கட்சிக்கு கருத்து கணிப்புகளில் குறிப்பிடப்படுவதைவிட அதிகமாகவே தொகுதிகள் கிடைக்கும் என்பது என்னுடைய தனிப்பட்ட கருத்து.

காங்கிரஸ் மேலும் மேலும் சுருங்கி வரும் நிலையில், அதன் பிரச்சாரங்கள் வலுவிழந்து வீணாகி வருகிறது. இதன் பிரச்சாரம் உறுதியற்றதாகவும் குழப்பமாகவும் இருந்து வருகிறது. அதன் செய்திகள் தெளிவாக இல்லை. நேற்று காங்கிரஸ் கட்சி தனது யுத்தியை மாற்றிக்கொண்டது. ராகுல் காந்தி பிரச்சாரத்தை தலைமை ஏற்று நடத்தினார், அவருடன் வரும் விளம்பர சமாசாரங்கள் பின்னுக்குத் தள்ளப்பட்டுள்ளன. காங்கிரஸ் கட்சித் தலைவி சோனியா காந்தி தானே முன்னின்று பிரச்சாரம் செய்வது என்று முடிவெடுத்துள்ளார். அனைத்து சேனல்களிலும் நேரம் பெற்று நாட்டு மக்களிடம் பேசினார்.

இவர்களுடைய விரக்தி தெளிவாகத் தெரிகிறது. அரசியல் தலைவர்களின் உரைகள், பேட்டிகள் செய்தியாளர் கூட்டங்கள் ஆகியவற்றை எப்போதுமே ஊடகங்கள் ஒலிபரப்பி வருகின்றன. எனவே, காங்கிரஸ் கட்சியின் தலைவர் தனது உரை மக்களிடம்போய்ச் சேர தனிப்பட்ட முறையில் ஊடகங்களின் நேரத்தைப் பெற வேண்டிய தேவையே இல்லை. இந்தக் கட்சியின் முதன்மை பிரச்சாரகர் என்ற பதவி மகனிடமிருந்து தாய்க்கு மாற்றப்பட்டுள்ளதை அறிவிக்கவே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்பது தெளிவு. இது ராகுல் காந்தியின் பேச்சுகள் மக்களிடம் எடுபடவில்லை என்று அவர் மீது ஏற்பட்டுள்ள அவநம்பிக்கையையே வெளிப்படுத்துகிறது. விலை கொடுத்து வாங்கப்பட்டுள்ள தொலைக்காட்சி நேரத்தில் வெளிப்படுத்தப்படும் செய்திகள் தேர்தல் போக்குகளில் எந்த கடைசி நேர மாற்றங்களையும் ஏற்படுத்தப்போவதில்லை. விலைவாசி உயர்வு, தவறான பொருளாதார கொள்கை மேலாண்மை, ஊழல், பிரதமராக யார் பதவி ஏற்கப்போகிறார் என்பது தெளிவாக இல்லாமல் இருப்பது ஆகியவை "இந்தியத்துவம்" அல்லது ஹிந்துஸ்தானியத்" என்பதை வெளிப்படுத்தவில்லை. இந்த செய்தி பலன் தரப்போவதில்லை. நேற்று விலை கொடுத்து வாங்கிய தொலைக்காட்சி சேனல்களின் நேரத்தில் ஒலிபரப்பப்பட்ட சோனியா காந்தியின் பேச்சு காங்கிரஸ் கட்சியில் "நான் இல்லம்மா" என்ற புதிய கோஷத்தை மட்டுமே உருவாக்கி உள்ளது.